செய்தி வெளியீடு எண்:596 நாள் : 24.11.2014

# பத்திரிக்கைச் செய்தி

மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி, பொது விநியோகத்திட்ட செயல்பாடுகள் குறித்த கலந்தாய்வுக் கூட்டம் சென்னை தலைமைச் செயலகத்தில் இன்று 24.11.2014, மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் இரா. காமராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொது விநியோகத் திட்டத்தின் மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு போதுமான தரமான விலையில்லா அரிசி அனைத்து கிடங்குகளிலும் சுமார் 3 மாத தேவைக்கு இருப்பு வைக்கப்பட்டுள்ளது. சர்க்கரை, கோதுமை, பாமாயில், பருப்பு வகைகள் உள்ளிட்ட ஏனைய அத்தியாவசியப் பொருள்களும் சீரானமுறையில் விநியோகம் செய்வது உறுதி செய்யப்பட்டு வருகிறது.

பொது விநியோகத் திட்ட கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்கள் நகர்வு செய்யப்படுவதை கண்காணிக்கவும், கடைகளில் உள்ள பொருள்களின் இருப்பினை அறிந்து அவ்வப்போது தேவையான பொருள்களை நகர்வு செய்யவும், புதிய குடும்ப அட்டைகளை வழங்கவும், போலி குடும்ப அட்டைகளை களையவும், இத்திட்டங்களை கணினி மயமாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுவரை தேசிய மக்கள்தொகை பதிவேட்டின்படி 5 கோடியே 87 ஆயிரத்து 395 நபர்களுக்கு உடற்கூறு பதிவுகள் (Bio-Metrics) கணினியில் சேகரிக்கும் பணி

மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் 4 கோடியே 71 இலட்சத்து 75 ஆயிரத்து 490 நபர்களுக்கு ஆதார் எண் வழங்கப்பட்டுள்ளது.

எனவே, **தற்போது புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளை 2015–ம் ஆண்டிற்கு புதுப்பிக்கும் வகையில் உள்தாள்களை அச்சிட்டு, குடும்ப அட்டையில் இணைத்து, குடும்ப அட்டையின் செல்லத்தக்க காலத்தை 01.01.2015 முதல் 31.12.2015 வரை நீட்டிக்க அரசு ஆணையிட்டுள்ளது என்று மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் தெரிவித்தார்.** குடும்ப அட்டைதாரர்கள் நியாயவிலைக் கடைகளுக்கு டிசம்பர் மாதம் அத்தியாவசியப் பொருட்கள் பெறவரும்போது அவர்களுடைய குடும்ப அட்டையில் 2015–ம் ஆண்டிற்கான உள்தாளினை இணைத்து வழங்குமாறும் உத்திரவிடப்பட்டுள்ளது. எப்பொருளும் வேண்டா குடும்ப அட்டைகள் வைத்திருப்பவர்கள் கணினி மூலம் புதுப்பித்துக் கொள்ளவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நடப்பு சம்பா நெல் கொள்முதல் பருவத்தில் (KMS 2014 -15) இதுவரை 167 அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் மூலம் 4200 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. அறுவடை முழுவீச்சில் துவங்கும் முன்பாக விவசாயிகளின் தேவைக்கேற்ப நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்க மாவட்ட ஆட்சியர்களுக்கு ஏற்கனவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகளுக்கு நெல் கொள்முதல் ஊக்கத் தொகையாக சன்னரக நெல்லுக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ.70/–ம் சாதாரக நெல்லுக்கு ரூ.50/–ம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் பொது விநியோகத் திட்டத்தில் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்கள் கடத்தப்படுவதை தடுப்பதற்கு கடுமையான நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டு வருகின்றன என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதுவரை **612** நபர்கள் தடுப்பு காவல் சட்டத்தின் கீழ் (BM ACT) கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்தார்.

இந்த கலந்தாய்வுக் கூட்டத்தில் அரசு உணவுத் துறை முதன்மை செயலாளர் திருமதி .எம்.பி.நிர்மலா,இ.ஆ.ப., உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறை ஆணையாளர் திரு.சூ.கோபாலகிருஷ்ணன்,இ.ஆ.ப., உணவுப் பொருள் குற்றப்புலனாய்வுத் துறை கூடுதல் இயக்குனர் திரு.கே.இராதாகிருஷ்ணன்,இ.கா.ப., தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக நிர்வாக இயக்குநர் திரு.எம்.சந்திரசேகரன்,இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன நிர்வாக இயக்குநர் திரு கே. நாகராஜன், இ.ஆ.ப. மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதன்மை செயலாளர் (உணவுத்துறை)

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**